| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.M.A.ஹபீபுர் ரஹ்மான்., | திரு / திருமதி. |
| நகர்மன்ற தலைவர், | நகர்மன்ற உறுப்பினர் |
| கடையநல்லூர் நகர்மன்றம், | வார்டு எண். |
| கடையநல்லூர். | கடையநல்லூர் நகர்மன்றம். |

அன்புடையீர்,

கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2023ம் ஆண்டு மார்ச்–2023 மாதம் 17ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். மேற்படி கூட்டப் பொருள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்,
கடையநல்லூர் நகர்மன்றம்.

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் – 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.30மணியளவில் நகர்மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட்டவுள்ள கூட்ட பொருள்கள் விபரம்.**

**தலைமை: திரு.M.A.ஹபீபுர் ரஹ்மான் அவர்கள்.**

**பொருள் எண்.1**

**நகர் மன்றத் தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

தென்காசி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர் நகராட்சி பகுதி கடையநல்லூர் கிராமம் மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் (Hill Area Conservation authority) அமைவதால் கட்டிடங்கள் கட்ட அனுமதி பெறுவதற்கும், மனைப்பிரிவு அனுமதி மற்றும் தனிமனை வரன்முறை அனுமதி பெறுவதற்கும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் (HACA) இருந்து கடையநல்லூர் நகரில் உள்ள அனைத்து பகுதிகளையும் நீக்குவதற்கு அரசிற்கு பிரேரணை அனுப்ப மன்றத்தில் தீர்மானம் கொண்டு வருதல்.

**பொருள் எண்.2**

**நகர் மன்றத் தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது 1,47,000 அதிகமான மக்கள் தொகை கொண்டு உள்ளது. கடையநல்லூர் நகராட்சி, கடையநல்லூர் வருவாய் கிராமம், கிருஷ்ணாபுரம் வருவாய் கிராமம், வைரவன்குளம் வருவாய் கிராமம், கம்பனேரி புதுக்குடி பகுதி II கிராமம் ஆகிய கிராம எல்லைகளை உள்ளடக்கி உள்ளது. கடையநல்லூர் நகராட்சி முழுமை திட்டம் (Master Plan) 2010ம் ஆண்டு அரசாணை எண்:249 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:12.11.2010 கீழ் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுடன் செயல்படுத்தப்படுகிறது. தற்போது மக்கள் தொகை கணிசமான அளவில் உயர்ந்துள்ளதால் நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகர்ப்புற தேவை அதிகமாக உள்ளது. 2010ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மாற்றியமைக்கப்பட்ட முழுமை திட்டம்(Modify Master Plan) உள்ள நில பயன்பாடு (Land Use) மற்றும் நில பயன்பாடு மண்டலங்களால்(Zones) தற்போது கடையநல்லூர் நகராட்சி உட்கட்டமைப்பு மற்றும் நகர்ப்புற வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஆகவே தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் கீழ் கடையநல்லூர் நகராட்சி முழுமை திட்டம் (Master Plan) மறுசீராய்வு (Review) செய்ய நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களை கேட்டுக்கொள்ளுதல்.

**பொருள் எண்.3**

**நகர் மன்றத் தலைவர் திரு.எம். ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டுவரும் தீர்மானம்**

அனுமதியற்ற மனைபிரிவில் உள்ள தனிமனைகளை வரன்முறைப்படுத்திட நமது ஆட்சியில் (2006–2011)–ல் சதுர அடிக்கு ரூ.2/– நகராட்சியில் பெற்றுக்கொண்டு அனைத்து பகுதிகளிலும் வரன்முறை செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டு கடையநல்லூர் நகர் பகுதிகளில் பெரும்பான்மையான தனிமனைகள் வரன்முறை செய்யப்பட்டது.

20.10.2016 வரை பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகள் வரன்முறை செய்ய பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகளை வரன்முறை செய்ய வேளாண்மை துறை, வனத்துறை, வருவாய் துறை மற்றும் கனிம வளத்துறை ஆகிய துறைகளில் தடையின்மைச் சான்று பெற்ற பின் நகர் ஊரமைப்பு துறை அனுமதி பெற்ற பின் நகராட்சியில் உரிய கட்டணம் செலுத்தி தனிமனைகளை வரன்முறை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின் படி கடையநல்லூர் கிராமம் பகுதியில் ஒரு தனிமனைகள் கூட வரன்முறை செய்யப்படவில்லை. பொதுமக்கள் தனிமனைகளை வரன்முறை செய்ய மேற்படி துறைகளில் தடையின்மை சான்று பெற இயலாத சூழ்நிலை உள்ளதால் தனிமனைகளை வரன்முறை செய்ய இயலவில்லை. இதனால் அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே, மேற்படி அரசாணையை ரத்து செய்து நமது ஆட்சியில் இருந்தது போல் சதுரடிக்கு கட்டணம் நிர்ணயம் செய்து தனிமனைகளை வரன்முறை செய்ய அரசிற்கு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.4**

கடையநல்லூர் நகராட்சி – **தூய்மை இந்தியா திட்டம் SBM(U)2.0–2022–2023 (திடக்கழிவு மேலாண்மை பணிகள்) திட்டத்தின் கீழ்** கடையநல்லூர் நகாட்சி வார்டு எண்.01, குமந்தாபுரம் பகுதியில் உள்ள பசுமை நுண்உரக்குடில் (MCC) எண்.04 வளாகத்தில் பொருட்கள் மீட்பு மையம் (Material Recovery Facility) கட்டும் பணியினை ரூ.43.00/–இலட்சத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் நிர்வாக அனுமதி வழங்கிள்ளதன் அடிப்படையிலும், நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருநெல்வேலி அவர்கள் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், மேற்காணும் பணிக்கு இணையதள வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணுமாறு இரண்டு எண்ணம் இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. M.மாடசாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | 0.04%<br>குறைவு | ரூ.43,000/–ஐ IOB, KDNR D.D.No.134204, நாள். 24.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. S.முருகையா,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | 14.63%<br>அதிகம் | ரூ.43,000/–ஐ IOB, KDNR D.D.No.134205, நாள். 25.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** சதவீதம் குறைவாகவும், கொடுத்துள்ள திரு. M.மாடசாமி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.4304/2022/இ1)**

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இந்நகராட்சிப்பகுதியில் புதிதாக பூங்காக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்து சமர்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் அரசாணை எண்.(Ms) எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA) துறை, (நிர்வாக அனுமதி), நாள்.20.01.2023–ல் **அம்ருட் 2.0 2022–2023 திட்டத்தின் கீழ்,** இந்நகராட்சிப் பகுதியில் புதிதாக இரண்டு எண்ணம் பூங்காக்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.65/–இலட்சம் ( மத்திய அரசு மானியம் ரூ.14/–இலட்சம், மாநில அரசு மானியம் ரூ.20/–இலட்சம், நகராட்சி பங்குத்தொகை ரூ.31/–இலட்சம்) என நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதிகளில் கீழ்காணுமாறு இரண்டு எண்ணம் பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ.65/–இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் மத்திய அரசு மானியம் ரூ.14/–இலட்சம், மாநில அரசு மானியம் ரூ.20/–இலட்சம் போக, மீதமுள்ள ரூ.31/–இலட்சத்தினை நகராட்சி பங்குத்தொகையாக நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்திரா நகர் புதிய காலனி பகுதியில் புதிதாக பூங்கா அமைக்கும் பணி. (வார்டு எண். H, பிளாக் எண்.29, நகர அளவை எண்.280 (பகுதி) . | ரூ.39.00/– |
| 2 | குமந்தாபுரம், ஆதிதிராவிடர் காலனி பகுதியில் புதிதாக பூங்கா அமைக்கும் பணி. (வார்டு எண். C, பிளாக் எண்.20, நகர அளவை எண்.35/1 (பகுதி). | ரூ.26.00/– |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.826/2022/இ1)**

**பொருள் எண்.6**

கடையநல்லூர் நகராட்சி – பெரியநாயகம் கோவில் குடிநீர் நீரேற்றும் நிலையத்தின் வடபுறம் விடுபட்ட பகுதிக்கு தடுப்புச்சுவர் அமைத்து சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் மராமத்து மேற்கொள்ளும் பணியினை ரூ.9,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.234, நாள்.29.11.2022ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. S.முருகையா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.01% குறைவு | ரூ.9000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008333, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. M.மாடசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 1.17% அதிகம் | ரூ.9000/– IOB Bank KDNR D.D.No.134182, நாள். 02.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.01%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. S.முருகையா, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.7**

கடையநல்லூர் நகராட்சி – கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 5, 6, 9, 11, 20, 25, 26, 28, 29, 31 ஆகிய பகுதிகளில் விடுபட்டுள்ள இடங்களில் புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்கிட ஏதுவாக பகிர்மானக் குழாய்கள் அமைத்தல் மற்றும் உள்ளமைப்புகள் மேற்கொள்ளும் பணியினை ரூ.9,96,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.234, நாள்.29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. K.S.அப்துல் மாலிக், ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.11% குறைவு | ரூ.9960/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008401, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. M.ராஜேந்திர பிரசாத், ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.24% அதிகம் | ரூ.10000/– IOB Bank KDNR D.D.No.134192, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.11%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.8**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மேல்நிலை தொட்டிகளுக்கு ஆள்துளை மூடிகள் (Man hole Covers) புதிதாக அமைத்து பராமரிப்பு மேற்கெள்ளும் பணியினை ரூ.5,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.234, நாள்.29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. V.முத்தையா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.04% குறைவு | ரூ.5000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008332, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. P.பாலசுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.11% அதிகம் | ரூ.7500/– TMB Bank KDNR D.D.No.660241, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு V.முத்தையா ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரது முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.06, ரகுமானியாபுரம் 8வது தெருவின் மேற்கு பகுதியில் பேவர்பிளாக் சாலையை மறுசீரமைப்பு செய்யும் பணி யினை ரூ. 80,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள்.29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P.A.முகம்மது அசன், ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.12% குறைவு | ரூ.800/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008351, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. A.M. சேகனா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 1.41% அதிகம் | ரூ.800/– IOB Bank KDNR D.D.No.92134187, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.12%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.A.முகம்மது அசன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.10**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.31, இப்ராஹிம் நகர் 2–வது தெருவில் சிறுபாலங்கள் புதுப்பித்து கட்டும் பணியினை ரூ. 2,85,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள்.29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. S.முருகையா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.05% குறைவு | ரூ.2850/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008334, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. P. குத்தாலிங்கம், ஒப்பந்தக்காரர், கடையநல்லூார். | 1.19% அதிகம் | ரூ.2850/– KVB Bank KDNR D.D.No.017133010438, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. S.முருகையா, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.11**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.28, அயோத்தி நகர் 3–வது குறுக்குத் தெருவின் விடுபட்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.2,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள். 29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P. குத்தாலிங்கம்<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.15%<br>குறைவு | ரூ.2000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008336, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. S.முருகையா,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.79%<br>அதிகம் | ரூ.1200/– IOB Bank KDNR D.D.No.921341840, ரூ.800/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008335, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.15%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P. குத்தாலிங்கம், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் , கூடுதல் செலவினம் ரூ.80000/–யும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.12**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி வார்டு எண். 07, பிள்ளையார் கோவில் வடக்கு தெரு, மங்கம்மாள் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணியினை ரூ.4,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள். 29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. M.கருப்பையாதாஸ்<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.08%<br>குறைவு | ரூ.4000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008400, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. M.ராஜேந்திர பிரசாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.03%<br>அதிகம் | ரூ.4000/– Bank KDNR D.D.No. , நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.08%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. M.கருப்பையாதாஸ், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.13**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி வார்டு எண்.31, இந்திரா நகர் புதுக்காலனியில் உள்ள சமுதாய கழிப்பறையினை சுற்றி தடுப்பு வேலி அமைக்கும் பணியினை ரூ.1,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள். 29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P. குத்தாலிங்கம் ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.17% குறைவு | ரூ.1000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008337, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. S.முருகையா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 1.42% அதிகம் | ரூ.1000/– IOB Bank KDNR D.D.No.921341832, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.17%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P. குத்தாலிங்கம், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.14**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண். 08, 12, 15, 17 மற்றும் 19 மற்றுல் 26ல் உள்ள பழுதடைந்த சிறுபாலங்களை புதுப்பித்துக்கட்டுதல் மற்றும் சாலை பாதுகாப்புக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலைகளில் வேகத்தடை அமைத்தல் பணியினை ரூ.10,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள். 29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திருமதி. M.மகேஷ்வரி ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.09% குறைவு | ரூ.10000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008375 நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. S.முருகையா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 1.30% அதிகம் | ரூ.10000/– IOB Bank KDNR D.D.No.921341857, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.09%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திருமதி. M.மகேஷ்வரி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.15**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண்.32, கிருஷ்ணன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூ.9,95,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.235, நாள். 29.11.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 03.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திருமதி. M.மகேஷ்வரி ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.08% குறைவு | ரூ.10000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0008376 நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. S.முருகையா, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.47% அதிகம் | ரூ.10000/– IOB Bank KDNR D.D.No.921341864, நாள். 03.01.2023ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.08%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திருமதி. M.மகேஷ்வரி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5628/2021/இ1)**

**பொருள் எண்.16**

கடையநல்லூர் நகராட்சியின் 2022–2023ஆம் ஆண்டிற்கான திருத்திய மற்றும் 2023–2024ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் தமிழ்நாடு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண்.1021/2022/பி1)**

**பொருள் எண்.17**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.31, இந்திரா நகர் (நியூ காலனி) கடையநல்லூர் கிராமம், புல எண்791ல் (சர்வே வார்டு H, பிளாக்–29, நகரளவை எண்.81/1) அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ள தெருவில் ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு உத்திரவு பிறப்பிக்ககோரி சென்னை, உயர்நீதி மன்றம் மதுரை கிளை WP(MD)No.111 of 2023ன்படி Tmt.M.ஸ்ரீதேவி, மேலக்கடையநல்லூர் என்பவரால் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி புலத்தில் அமைந்துள்ள பகுதிகள் நகரளவை ஆவணங்களில் தனியார் பட்டா நிலங்களாகவும், தெருக்கள் என பதிவு செய்யப்படாமலும் உள்ளது. எனவும், மேற்படி ஆக்கிரமிப்பு தொடர்பாக கடையநல்லூர் நகரசார் ஆய்வாளரின் அறிக்கையினை தாக்கல் செய்தும் 04.01.2023 அன்று நீதிமன்றத்தில் கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.எம்.சாரங்கன் அவர்கள் மூலம் இந்நகராட்சியின் சார்பாக ஆஜராகப்பட்டது. மேற்கண்ட வழக்கில் இந்நகராட்சியின் சார்பாக ஆஜராகிய கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.M.சாரங்கன் அவர்களுக்கு வழக்குரைஞர் கட்டணம் ரூ.9500/– வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2022–23 ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.142/2023/எப்1)**

**பொருள் எண்.18**

நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடஙகளை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப1) துறை 23.01.2023ம் தேதிய அரசாணை (நிலை) எண்.10 மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண்.676/2023/சி1)**

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் குடிநீர் பிரிவு காவலராக பணிபுரிந்து வரும் திரு.V.மகாதேவன் என்பவர் தனது ஊதிய மறு நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நிதிமன்ற மதுரைக் கிளையில் தொடர்ந்த W.P.(MD) No.28266/2022 வழக்கில் இந்நகராட்சி சார்பாக வாதிட்ட வழக்கறிஞர் திரு.எம்.சரவணகுமார் அவர்களுக்கு வழக்குக் கட்டணம் ரூ.9500/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.4608/2017/சி1)**

**பொருள் எண்.20**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பசுமை உரக்குடில்கள் அமைக்கப்பட்டு தற்போது குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி குப்பைகளை மக்கச் செய்வதற்கு தேவையான நுண்ணுயிர் திரவம் தயார் செய்யும் வகைக்கு தேவையான பொருள் தேவையான அளவு வாங்குவதற்கு ஓராண்டுக்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2395/2019/எச்1)**

**பொருள் எண்.21**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN76 AM7465 TATA ACE மினி ஆட்டோ வாகனத்தின் கிளட்ச் பிளேட் அசெம்பிளி செட், ரிலீஸ் பேரிங் கிளட்ச் கேபிள் பழுதடைந்துவிட்டது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி கிளட்ச் புதிதாக மாற்றி பொருத்துவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.6200/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.456/2023/எச்1)**

**பொருள் எண்.22**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN76 AM7479 TATA ACE மினி ஆட்டோ வாகனத்தின் மின்கலம் பழுதடைந்துவிட்டது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி புதிதாக மின்கலம் வாங்க பொருத்துவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.5000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.253/2023/எச்1)**

**பொருள் எண்.23**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN76 P 2758 TATA ACE டம்பர் பிளேசர் வாகனம் வாங்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் பயன்பாடு இல்லாமல் நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கி ரூ.9376/– நிலுவையில் உள்ளது. மேற்படி வரித்தொகை ரூ.9376/–ஐ வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.528/2023/எச்1)**

**பொருள் எண்.24**

கடையநல்லூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN76 A 4394ல் ரேடியேட்டர், இஞ்சின் கேஸ்கெட் பழுதடைந்து உள்ளதால் ரேடியேட்டர் சர்வீஸ், கேஸ்கெட் சரி செய்து, பேன் பெல்ட் மற்றும் பேரிங் புதியது மாற்றுதல் ஆகிய பணிகள் செய்வதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.9500/—க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.223/2023/எச்1)**

**பொருள் எண்.25**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டிப்பர் லாரிகளுக்கு 2023—2024ம் ஆண்டிற்கான வரிகள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கீழ்கண்டவாறு

| வாகனத்தின் எண் | சாலை வரி | சர்வீஸ் சார்ஜ் | 1% வரி | பசுமை வரி | மொத்தம் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| TN76 AF 5635 | 7600 | 10 | 76 | 456 | 8142 |
| TN76 B 1222 | 3000 | 10 | 30 | 505 | 3545 |
| | | | | ஆன் லைன் கட்டணம் | 200 |
| | | | | **மொத்தம்** | **11887** |

வரித்தொகை ரூ.11887/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.529/2023/எச்1)**

**பொருள் எண்.26**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனம் TN76AP4388ன் ஐந்து டயர்கள் மற்றும் டியூப்கள் முழுவதும் தேய்மானம் அடைந்துவிட்டதால் புதிதாக ஐந்து டயர் மற்றும் டியூப்கள் வாங்கி பொருத்துவதற்கு தகுதியான பணிமனைதாரர்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவரின் விபரம் | வேலை விபரம் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ அம்பாள் மோட்டார் ஒர்க்ஸ், தென்காசி | 5 டயர்கள்(MRF) & டியூப்கள் வாங்கி பொருத்துதல் | 20000 |
| 2. | ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், 3/514, செங்கோட்டை மெயின் ரோடு. கொட்டாக் குளம், செங்கோட்டை. | 5 டயர்கள்(MRF) & டியூப்கள் வாங்கி பொருத்துதல் | 19875 |
| 3. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், புதுக்குடியிருப்பு, நாகர்கோவில் | 5 டயர்கள்(MRF) & டியூப்கள் வாங்கி பொருத்துதல் | 20100 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2ல் கண்டுள்ள ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் நிறுவனத்துக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினத்தொகை ரூ.20000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.596/2023/எச்1)**

**பொருள் எண்.27**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனம் TN76AP4388ன் ஆயில் பில்டர்ரேடியேட்டர்ஓஸ் செட், இஞ்சின் ஆயில் பெட் புதிதாக பொருத்துவதற்கு தகுதியான பணிமனைதாரர்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவரின் விபரம் | வேலை விபரம் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ், 3/514, செங்கோட்டை மெயின் ரோடு. கொட்டாக் குளம், செங்கோட்டை. | ஆயில் பில்டர் ரேடியேட்டர் ஒஸ் செட், இஞ்சின் ஆயில் பெட் புதிதாக மாற்றுதல் | 4964 |
| 2. | ஸ்ரீ அம்பாள் மோட்டார் ஓர்க்ஸ், தென்காசி | ஆயில் பில்டர் ரேடியேட்டர் ஒஸ் செட், இஞ்சின் ஆயில் பெட் புதிதாக மாற்றுதல் | 5600 |
| 3. | கணேஷ் மோட்டார் ஓர்க்ஸ், புதுக்குடியிருப்பு, நாகர்கோவில் | ஆயில் பில்டர் ரேடியேட்டர் ஒஸ் செட், இஞ்சின் ஆயில் பெட் புதிதாக மாற்றுதல் | 5030 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினத்தொகை ரூ.5000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.597/2023/எச்1)**

**பொருள் எண்.28**

கடையநல்லூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் பின்வரும் வாகனங்களின்

| வ. எண் | வண்டி எண் விபரம் | இன்சூரன்ஸ் முடியும் நாள் | செலுத்த வேண்டிய இன்சூரன்ஸ் தொகை |
|---|---|---|---|
| 1. | TN76 P 9311 மினி ஆட்டோ | 19.02.2023 | 20438 |
| 2. | TN76 AF 5635 டிப்பர் லாரி | 23.02.2023 | 36378 |
| 3. | TN76 AP 4341 மினி ஆட்டோ | 27.02.2023 | 20632 |
| 4. | TN76 B 1222 டிப்பர் லாரி | 27.02.2023 | 32493 |
| 5. | TN76 AP 4388 மினி ஆட்டோ | 27.02.2023 | 20632 |
| 6. | TN76 AP 4374மினி ஆட்டோ | 27.02.2023 | 20353 |
| 7. | TN76 AP 4394 மினி ஆட்டோ | 27.02.2023 | 21001 |
| | **மொத்தம்** | | **171927** |

இன்சூரன்ஸ் பிப்ரவரி 2023ல் முடிவடைய உள்ளதால் யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் கடையநல்லூர் கிளை நிறுவனத்திலிருந்து வரப்பட்ட கேட்புத்தொகை மற்றும் ஆன்லைன் மூலம் இன்சூரன்ஸ் புதுப்பிக்க உத்தேச செலவுத்தொகை ரூ.200000/—க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.254/2023/எச்1)**

**பொருள் எண்.29**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN76 B1222 டிப்பர் லாரிக்கு 08.02.2023ல் தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் அதனை புதுப்பிக்கும் வகையில் கீழ்க்கண்டவாறு பழுதுகள் நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1. | நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் பிரேக் செக்கப் செய்தல் பேரிங் செக்கப் செய்தல் |
| 2. | நான்கு சைடு பட்டை செட் விரப்பு அடித்தல், முன் பக்கம் கூடுதலாக இரண்டு பட்டை சேர்த்தல் |
| 3. | பிரேக் புஸ்டர் அசெம்பிளி செய்து மாற்றுதல் |
| 4. | கியர் கேபிள் ஜாய்ண்ட் ஸ்டார் செக்கப் செய்தல் |
| 5. | கிங்பின் பேரிங் பாக்ஸ் டயர்ராடு எண்ட்கள் சரி செய்தல் |
| 6. | கம்பிளிட் எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல் மற்றும் செல்ப் மோட்டார் சர்வீஸ் செய்தல் |
| 7. | இஞ்சின் டர்போ சரி செய்தல் |

| | |
|---|---|
| 8. | கம்ப்ளீட் பெயிண்டிங் டிங்கரிங் வேலைகள் செய்தல் |
| 9. | இஞ்சின் ஆயில், கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ் ஆயில் , பிரேக் ஆயில், ஆயில் பில்டர்கள், டிசல் பில்டர் மாற்றம் செய்தல். |
| 10. | வட்டாரபோக்குவரத்து அலுவலக செலவினங்கள் |

ஆகியவற்றுக்கான உத்தேச செலவினம் ரூ.80000/—க்கும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தகுதிவாய்ந்த உள்ளூர் பணிமனைதாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.252/2023/எச்1)**

**பொருள் எண்.30**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.01 முதல் 33 வார்டுகளிலும் 2022—2023ம் நிதியாண்டுக்கான வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலினை தீவிரபடுத்தவும் 100% இலக்கினை அடையும் வகையிலும் ஆட்டோவில் ஒலி பெருக்கி வைத்து 22.02.2023 முதல் 31.03.2023 முடிய விளம்பரம் செய்ய உள்ளூர் ஆட்டோ உரிமையாளர்களிடமிருந்து 22.02.2023ம் தேதி கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் (ரூ) நாளொன்றுக்கு |
|---|---|---|
| 1. | M.மகேந்திரன்,<br>54G வடக்கு விளை காலனி தெரு,<br>குமந்தாபுரம், கடையநல்லூர். | 2200 |
| 2. | G. மகேஷ்,<br>27A, கிருஷ்ணன் கோவில் தெரு,<br>கிருஷ்ணாபுரம். | 2350/— |
| 3. | மா.முப்புடாதி,<br>12/A மாதாங்கோவில் தெரு,<br>மேலக்கடையநல்லூர். | 2450/— |

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சி வரி வசூல் பணிகளை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொருளில் கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்த வரிசை எண்.1ல் கண்ட M.மகேந்திரன், 54G வடக்கு விளை காலனி தெரு, குமந்தாபுரம், கடையநல்லூர் என்பவரின் மூலம் 22.02.2023 முதல் 31.03.2023 வரை 38 நாட்களுக்கு ரூ.83600/— செலவில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.611/2023/அ1)**

**பொருள் எண்.31**

கடையநல்லூர் நகராட்சியில் இயங்கி வரும் கணினி வசூல் மையங்களுக்கு VPN CONNECTION (VIRTUAL PRIVATE NETWORK) BSNL நிறுவனம் மூலம் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி இணைப்புகளுக்கு 01.10.2022 முதல் 31.12.2022க்கான ரூ.48295/— BSNL நிறுவனத்திற்கு செலுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.29280/2016/IT நாள்.09.02.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.48295/—யை BSNL நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொருளில் கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.640/2023/அ1)**

பொருள் எண்.32

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தொற்று நோய் பரவும் சூழ்நிலை இருப்பதால் அதனை கொசு புழு தடுப்பு பணியாளர்களை கொண்டு (DBC) மொத்தமுள்ள குடியிருப்புகள் (32319) மற்றும் 1661 கடைகளுக்கு பொது சுகாதாரத்துறை இயக்குநர் (DPH) மற்றும் சுகாதார பணிகள் துணை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி 300 குடியிருப்புகளுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் மொத்தம் 110 பணியாளர்கள் பணி செய்து வருகின்றனர். எனவே 2023–24ம் (01.04.2023 முதல் 31.03.2024 முடிய) ஆண்டிற்கு தேவையான கொசுபுழு தடுப்பு பணியாளர்கள் (DBC) மொத்தம் 110 நபர்களை தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2022–23ம் ஆண்டிற்கான தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்து டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 765/2023/எச்1)**

பொருள் எண்.33

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனம் TN76AM7479ன் இரண்டு டயர்கள் மற்றும் டியூப்கள் முழுவதும் தேய்மானம் அடைந்துவிட்டதால் புதிதாக இரண்டு டயர் மற்றும் டியூப்கள் வாங்கி பொருத்துவதற்கு தகுதியான பணிமனைதாரர்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவரின் விபரம் | வேலை விபரம் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|
| 1. | மூஸா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி. | இரண்டு டயர்கள் (APPOLO) டயூப்கள் வாங்கி பொருத்துதல் | 8000 |
| 2. | ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்,<br>3/514, செங்கோட்டை மெயின் ரோடு.<br>கொட்டாக் குளம், செங்கோட்டை. | இரண்டு டயர்கள் (APPOLO) டயூப்கள் வாங்கி பொருத்துதல் | 7800 |
| 3. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புதுக்குடியிருப்பு,<br>நாகர்கோவில் | இரண்டு டயர்கள் (APPOLO) டயூப்கள் வாங்கி பொருத்துதல் | 8200 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2ல் கண்டுள்ள ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினத்தொகை ரூ.7800/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.646/2023/எச்1)**

பொருள் எண்.34

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 90364 ஆகும். இந்நகராட்சியின் மொத்தப்பரப்பளவு 52.25 ச.கிமீ அமையப் பெற்றுள்ளது.

இந்நகராட்சியானது நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.2316 நாள்.01.10.1966ன்படி இந்நகராட்சி 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசால் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்தது. தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் அரசாணை எண்.238 நாள்.02.12.2008ன்படி முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

<u>நகரின் சிறப்பு</u>

தமிழ்நாடு இந்து அறநிலைத்துறையின் கீழ் இயங்கி வரும் அருள்மிகு கடகாலீஸ்வரர் திருக்கோவில் காரணமாக கடையநல்லூர் என்ற பெயர் வருவதற்கு காரணமான அமைந்துள்ளது.

இந்நகராட்சி மையப்பகுதியில் அமைய பெற்ற மக்தூம் ஞானியர் பெரியபள்ளிவாசல் 11 நாள் திருவிழாவாக நடைபெறும் கந்தூரி சந்தனக்கூடு விழாவில் அனைத்து சமுதாய இன மக்களும் கலந்து கொண்டு வழிபாடு செய்வது சமுக நல்லிணக்கத்திற்கு மிகவும் சிறப்பானதாகும். இந்நகராட்சியில் கிழக்கு பகுதியில் அமையப்பட்ட ஸ்ரீ அபயஹஸ்த ஆஞ்சநேய சுவாமி கோவில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் காரணமாக இந்நகராட்சிக்கு சுமார் 100 கி.மீ தூரத்திலிருந்தும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்றனர். இந்நகராட்சி பகுதியில் வசிக்கின்ற பொதுமக்களில் பாதி நபர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருகிறார்கள். கடையநல்லூரை குட்டி துபாய் நகரம் என்ற செல்லப்பெயருடன் குறிப்பிடுவது வழக்கமாக உள்ளது. இந்நகரம் அருகில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையப்பட்டுள்ள சுற்றுலா தலமான குற்றாலம் பகுதியில் சுற்றி பார்ப்பதற்காகவும், தேசிய நெடுஞ்சாலை வழியாக சுமார் 15ஆயிரம் பயணிகள் இந்நகராட்சியை கடந்து செல்கின்றனர்.

<u>வரவினங்கள்</u>

கடையநல்லூர் நகராட்சி முதல் நிலை நகராட்சி பெற்று 15ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. இந்நகராட்சியில் 31729 குடியிருப்பு கட்டிடங்களும், 1590 வணிக வளாக கட்டிடங்களும், 30 தொழிற்சாலை கட்டிடங்களும் ஆக மொத்தம் 33349 கட்டிடங்களுக்கு சொத்துவரிவிதிக்கப்பட்டு 530.34 இலட்சம் ஓராண்டுக்கு வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் 18540 கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு சொந்தமான 91 கடைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.39.64 இலட்சம் வருவாய் வருகின்றது. இந்நகர் பகுதியில் உள்ள 33349 குடியிருப்பு மற்றும் வணிக வளாக கட்டிடங்களில் தினசரி சேகரமாகும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.47.36 இலட்சம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | வருட வருமானம் (தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு) ரூபாய் | | | பரப்பளவு ச.கி.மீ | மக்கள் தொகை | மொத்த வார்டுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2019–20 | 2020–21 | 2021–22 | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | கடையநல்லூர் | 89963521 | 19474953 | 156187931 | 52.25 | 90364 | 33 |

<u>நகராட்சி நிரந்தரப் பணியாளர்கள்</u>

இந்நகராட்சியில் ஆணையாளர் (முதல்நிலை) உதவி செயற்பொறியாளர் நிலையில் நகராட்சி பொறியாளர், இளநிலை பொறியாளர், பணி ஆய்வர்(காலியிடம்), முதல் நிலை நகரமைப்பு அலுவலர்–1, நகரமைப்பு ஆய்வாளர்(காலியிடம்) பணியாற்றி வருகின்றனர். பொது பிரிவில் மேலாளர் வகுப்பு–4, உதவியாளர்கள் வகுப்பு–5ல்–2, 8 இளநிலை உதவியாளர்கள், 1 வருவாய் ஆய்வாளர்(காலியிடம்), 10 வருவாய் உதவியாளர்கள், கணினி திட்ட அமைப்பாளர், பதிவறை எழுத்தர்–1(காலியிடம்), தட்டச்சர்–1, அலுவலக உதவியாளர் – 4, குடிநீர் குழாய் பொறுத்துநர்கள்–2 (காலியிடம்–1), இரவு காவலர்–2, மின்கம்பியாளர்கள்–2, துப்புரவு அலுவலர்–1, துப்புரவு ஆய்வாளர் –2, ஒட்டுநர் –6 (காலியிடம் –3), துப்புரவு பணி மேற்பார்வையாளர் –2, மகப்பேறு உதவியாளர் –2 (காலியிடம்–1), மகப்பேறு ஆயா–2 (காலியிடம்–1), தூய்மை பணியாளர்கள்–100 (காலியிடம் –11) பணியாற்றி வருகின்றனர்.

<u>நகர் விஸ்தரிப்பு</u>

இந்நகராட்சியில் மேற்கே ரகுமானியாபுரம் பகுதி, கிழக்கே முத்துகிருஷ்ணாபுரம் பகுதி, தெற்கு இந்திரா நகர் பகுதி மங்களாபுரம் ஊராட்சி ஒன்றியம், வடக்கே குமந்தாபுரம் கருப்பாநதி அணை வரை நகர் விஸ்திகரிப்பு பெற்று வருகிறது. இந்நகராட்சி மையப்பகுதியில் டி தரம் கொண்ட காமராஜா பேருந்து நிலையம் அமைந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சி தொடர்ந்து வளர்ந்து வருவதால் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்குரிய அரசாணை(நிலை எண்.113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி–வி(2)) நாள்.30.08.2019ல் ஆண்டு மொத்தம் வருமானம் ரூ.6.00 கோடி முதல் 10 கோடிக்கு மிகையாகாமல் உள்ள மொத்த ஆண்டு வருமானம் கொண்ட நகராட்சியை தரம் உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு

